TNRM050045712023

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.,B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**பட்டியல் வழக்கு எண்.273/2023**

**CNR.NO: TNRM05-004571-2023**

1. காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : அரசுக்காக,
சார்பு ஆய்வாளர் அவர்கள்,
இருப்பு பாதை காவல் நிலையம்,
இராமேஸ்வரம்.
குற்ற எண்.09/2022.

**A1. எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சக்திகுமார் |
| 3. | த/பெ | : | சந்தான கிருஷ்ணன் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | எண்,3-2063, மீனவர் காலணி, அக்காள்மடம்,பாம்பன்,இராமநாதபுரம். |
| 6. | வயது | : | 20/2022 |

7. சம்பவ நாள் : 05.04.2022–ம் தேதி 3.55 மணி
8. புகார் தேதி : 05.04.2022 –ம் தேதி
9. எதிரி கைது செய்யப்பட்ட நாள் : 05.04.2022 ம் தேதி 06.40 பி.ப மணி
10. பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் : 11.08.2022–ம் தேதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
11. கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 08.08.2023
12. விசாரணை துவங்கப்பட்ட நாள் : 20.12.2024
13. விசாரணை முடிவுற்ற நாள் : --
14. சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் : எதிரி மீது பிரிவுகள் 379 IPC படி

TNRM050045712023

| | | | |
|---|---|---|---|
| 15 | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது பிரிவுகள் 379 IPC படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | -- |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | -- |
| 18. | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | -- |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | | இல்லை |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | வழக்கறிஞர் திரு.வருண் |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 12.06.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 12.06.2026. |

TNRM050045712023

28. நீதிபதியின் முடிவு : **முடிவில், எதிரி பிரிவு 379 IPC-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரி 4 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், அபராதம் ரூ.2,500/- மட்டும் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 1 வார காலம் சாதாரண சிறை தண்டனை விதித்தும் BNSS பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி 05.04.2022ம் தேதி முதல் 11.08.2022ம் தேதி வரை 129 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார் குற்றவாளிகள் ஏற்கனவே சிறையிலிருந்த காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து கழித்துக் கொள்ள பிரிவு 468 BNSS கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.**

**இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட PR.No.294/2022-ல் கண்ட வழக்கு சொத்தான VIVO V17 Dark blue colour Valued Rs.10000 -யை புகார் மனுதாரரான கருப்பசாமியிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.**

இவ்வழக்கு 08.08.2023ம் தேதியன்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு (Crpc) பிரிவு 173ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வருண் அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு ஆஜராகி, விசாரணைக்கு வரப்பெற்று, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்த பின்னர் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

TNRM050045712023

**<u>தீர்ப்புரை</u>**

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

புகார்தாரர் கடந்த 05.04.2022—ம் தேதி இரயில்வண்டி எண் 22661 சென்னை to இராமேஸ்வரம் சேது அதிவிரைவு இரயில் வண்டியில் DL1 கோச்சில் டீ வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அதிகாலை சுமார் 03.55 மணியளவில் பாம்பன் இரயில் நிலைய நடைமேடைக்கு வந்தபோது ஒருவருக்கு டீ ஊற்றிவிட்டு மீதி சில்லரையை எடுத்த வாதி VIVO V17 Dark blue colour என்ற செல்போனை திருட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு திருடிச் சென்ற குற்றம் புரிந்ததாக இருப்பு பாதை காவல்நிலைய சார்பு ஆய்வாளரால் குற்றம் சாட்டப்பட்டவர் மீது 379 IPC—ன் கீழ் குற்றம் செய்ததாக (Crpc) பிரிவு 173—ன் கீழ் புகார் தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நிலையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

3. மேற்சொன்ன ஒப்புதல் மனு இந்நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டு எதிரிகள் குற்றத்தை தன்னிச்சையாக எவ்வித தூண்டுதலும் இன்றி ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெளிவாகியது. மேலும் குற்றம் சாட்டப்பட்டவரிடம் குற்றத்தின் தன்மை குறித்தும் அதை ஒப்புக்கொள்வதன் மூலமாக ஏற்படும் விளைவுகள் குறித்தும் மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் விளக்கி கூறப்பட்டது. அதன் பின்பும் எதிரி குற்றத்தை விபரங்கள் அறிந்து ஒப்புக்கொள்கிறார் என்பது தெளிவாகியது. மேற்சொன்ன குற்ற ஒப்புதலிலிருந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்தும், எதிரி பிரிவு 379 IPC—ன் படி குற்றவாளி என்பதை இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிக்கு மேற்படி பிரிவின் கீழ் வழங்க இருக்கும் தண்டனை குறித்து எதிரியிடம் வினவியபோது எதிரிகன் இருவரும் அதற்கு "நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றும், குறைந்தபட்ச தண்டனை

வழங்குமாறும், வேறு முன் வழக்குகள் இல்லை என்றும் வேண்டினார்".

4. இவ்வழக்கின் தன்மை, சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்தும், வழக்கு ஆவணங்களை இந்த நீதிமன்றம் பார்வையிடுகையில், எதிரிகளின் வயது மற்றும் முதன்முறை குற்றவாளி என்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கில் திருடப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ.10,000/- என்பதை கருத்தில் கொண்டும், எதிரி தன்னிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனுதாக்கல் செய்திருப்பதை கருத்தில்கொண்டும், குற்றத்தை ஒப்புக்கொள்வதே பாதி திருந்தியதற்கு சமம் என்று இந்நீதிமன்றம் கருதி எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை தர தேவையில்லை என்றும் பிரிவு 379 IPC-ன் கீழ் ஒரு வருடத்திற்கு குறைவாக மேற்சொன்ன காரணங்களால் தண்டனை வழங்கலாம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

5. இறுதியாக, எதிரி பிரிவு 379 IPC-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு 4 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், அபராதம் ரூ.2,500/- மட்டும் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 1 வார காலம் சாதாரண சிறை தண்டனை விதித்தும் BNSS பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

6. இவ்வழக்கில் எதிரி 05.04.2022ம் தேதி முதல் 11.08.2022ம் தேதி வரை 129 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார் குற்றவாளிகள் ஏற்கனவே சிறையிலிருந்த காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து கழித்துக் கொள்ள பிரிவு 468 BNSS கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

7. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட PR.No.294/2022-ல் கண்ட வழக்கு சொத்தான VIVO V17 Dark blue colour Valued Rs.10000 -யை புகார் மனுதாரரான கருப்பசாமியிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

TNRM050045712023

*இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 12 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.*

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.12 13:56:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

இல்லை

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

இல்லை

**எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

**சான்றுப்பொருள்:**

இல்லை

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.12 13:56:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

TNRM050045712023